

நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் புறவழிச்சாலையினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையிலிருந்து காணொலி காட்சி வாயிலாக 01.11.2025 அன்று துவக்கி வைத்தார்கள்.அதனைத் தொடர்ந்து அம்பாசமுத்திரம் புறவழிச்சாலை கல்லிடைக்குறிச்சி பொட்டல் பகுதியில் நடைபெற்ற நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்று மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார் தலைமையில்,நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ.மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் ஜெகதீஸ் ஆகியோர் முன்னிலையில் மரக்கன்றுகளை நட்டு வைத்தார்.



நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஊராட்சி ஒன்றியம், குஞ்சப்பனை ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் கலந்து கொண்டு ஊராட்சியில் நடைபெற்ற மற்றும் நடைபெறவிருக்கும் பணிகளை கூறி பொதுமக்களிடம் கலந்துரையாடினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக பொறுப்பாளர்.கே. எம். ராஜு, அவைத் தலைவர் போஜன், நகர மன்ற தலைவர் ஜெயக்குமாரி, ஒன்றிய செயலாளர் நெல்லை கண்ணன், ஒன்றிய செயலாளர் பீமன் உட்பட அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

### அரியலூர் மாவட்டக் கழகத்தின் சார்பில்

# ‘என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி’ ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர்கள் கே.என்.நேரு, எஸ்.எஸ்.சிவசங்கர் பங்கேற்பு!

அரியலூர், நவ, 3–

முதலமைச்சர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, அரியலூர் மாவட்டக் கழகத்தின் சார்பில் ‘என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி’ ஆலோசனைக் கூட்டம் கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர் தலைமையில் அன்னலட்சுமி ராஜபாண்டியன் திருமண மண்டபத்தில் அரியலூர், ஜெயங்கொண்டம், குன்னம் சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த BLA2, BDA (பூத் IT Wing) நிர்வாகிகள்,கழக ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளர் மண்டல பொறுப்பாளர் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அண்ணன் கே.என்.நேரு, தமிழ்நாடு அரசு போக்கு வரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் ஆகியோர் கலந்து கொண்டு, வரவிருக்கும் 2026 சட்டமன்றத் தேர்தலில் நாம் ஆற்ற வேண்டிய களப்பணிகள் குறித்தும், வாக்குச்சாவடி அளவில் கழகத்தை வலுப்படுத்துவது குறித்தும் சிறப்புரையாற்றி, ஆலோசனைகளை வழங்கினார்கள்.

**அமைச்சர் கே.என்.நேரு பேச்சு!**

அமைச்சர் கே.என். நேரு பேசியதாவது:

வாக்காளர் பட்டியலில் யாரை சேர்க்க வேண்டும் என்பது எவ்வளவு முக்கியமோ அதே அளவிற்கு யாரை சேர்க்கக்கூடாது என்பது முக்கியம் அதிமுகவிற்கு இருக்கும் ஒரே நம்பிக்கை ஒன்றிய அரசு நமக்கு எல்லாம் செய்து விடும் என்ற நம்பிக்கையை நாம் தகர்க்க வேண்டும் என நகராட்சி மற்றும் நிர்வாகத் துறை அமைச்சர் கே. என். நேரு தெரிவித்தார்.

மத்திய அரசு கொண்டுவந்துள்ள வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்த பணியை ஆறு மாதத்திற்கு முன்பு செய்திருந்தால் நாம் எதிர்க்க போவதில்லை ஆனால் தேர்தலுக்கு மூன்று மாதங்களே இருக்கும் நிலையில் அவசரம் அவசரமாக இந்த பணிகளை செய்வதால் தான் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை நமது முதலமைச்சர் கூட்டியுள்ளார் இக்கூட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்தத்தில் உள்ள சாதக பாதகங்களை எடுத்துக் கூறி ஆலோசனை நடத்த உள்ளார் எனவே வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்த பணியை தவறவிடாமல் சிறப்பாக பணியாற்ற வேண்டும் நகராட்சி பகுதிக்கு 2005 ஆண்டுக்கு முன்பிருந்த வாக்காளர்கள் ஊராட்சி பகுதிக்கு 2002 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த வாக்காளர்கள் அப்படியே இருப்பார்கள் இது அரியலூர் மாவட்டத்தில் 57 சதவீத வாக்காளர்களாக உள்ளனர் மீதமுள்ள 45 சதவீத வாக்காளர்களை தான் நாம் சரி பார்க்க வேண்டும். இதில் வாக்குச்சாவடி முகவர்களின் பங்கு முக்கியமானதாகும். இதில் யாரை சேர்க்க வேண்டும் என்பது எவ்வளவு முக்கியமோ அதே போல் யாரை சேர்த்து விடக்கூடாது என்பது முக்கியம். இதில் கவனமாக இருக்க வேண்டும் வட மாநில தொழிலாளர்களுக்கு ஓட்டை கொடுங்கள் என்று சொன்னால் அது சரியாக இருக்காது சிறுபான்மையின மக்கள் நமக்கு அதிகமாக வாக்கு அளிக்கிறார்கள் எனக் கூறி வாக்காளர் பட்டியலில் சேர்க்க தவறுவதை நாம் விடக்கூடாது. இப்பணியை அனைத்து அணி பொறுப்பாளர்களும் சிறப்பாக மேற்கொள்ள வேண்டும். இதை சிறப்பாக மேற்கொண்டால் வரும் தேர்தலில் நாம் வெற்றி பெற்று தமிழ்நாட்டின் முதலமைச்சராக இரண்டாவது முறையாக மு.க. ஸ்டாலின் பதவி ஏற்பார். யார் இருக்க வேண்டும் என்பது எவ்வளவு முக்கியமோ அதேபோல் யார் இருக்கக் கூடாது என்பதும் முக்கிய பணியாக இருக்க வேண்டும். திமுக கூட்டணி உடைந்து விடும் என எடப்பாடி பழனிச்சாமி கூறி வருகிறார். நமது கூட்டணி உடையாது. ஆனால் அதிமுக கூட்டணியில் இருந்த பாமக டிடிவி தினகரன் ஓபிஎஸ் உள்ளிட்ட பலர் வெளியில் வருகிறார்கள் அவர்களுக்கு இருக்கும் ஒரே நம்பிக்கை ஒன்றிய அரசு நமக்கு எல்லாம் செய்து விடும் என நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த நம்பிக்கையை வீணடிக்க வேண்டும் என்று சொன்னால் ஓட்டு சேகரிப்பில் தீவிரமாக இருக்க வேண்டும். வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்தத்தில் நாம் அனைவரும் இன்னும் ஒரு மாதத்திற்கு தீவிரமாக பணியாற்ற வேண்டும் எனக் கூறினார்.

**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் பேச்சு!**

அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பேசியதாவது:

ஒன்றிய அரசு SIR என்கின்ற பெயரில் மேற்கொள்ளும் இந்த பணிக்கு கட்சி நிர்வாகிகளை ஒன்றியநகர கிளை அளவில் தயார் செய்வதற்காகவே இந்த ஆலோசனை கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளோம்.

பீகாரில் வாக்காளர் பட்டியல் சீரமைப்பு என்கின்ற பெயரில் 65 லட்சம் வாக்காளர்களை நீக்கி உள்ளனர். இது குறித்து இந்திய அளவில் போராட்டங்கள் நடைபெறுவதை பார்க்க முடிகின்றது. இன்று மோடி தலைமையிலான பாஜக விரைவில் தேர்தலை சந்திக்க உள்ள 5 மாநிலங்களுக்கு இந்த SIR என்கின்ற தேர்தல் பட்டியல் சீர்திருத்தத்தை தேர்தல் மூலமாக அறிவித்துள்ளது.

இதன் மூலம் பாஜகவே, தனக்கு எதிரான ஓட்டுகளை நீக்கி வெற்றியை பெறலாம் என்கின்ற முயற்சியில் இறங்கி உள்ளது. அதற்கு நாம் இடம் கொடுக்காமல் இந்த பணியை எவ்வாறு மேற்கொள் வேண்டும் என்பதற்காக இந்த கூட்டத்தை கூட்டி உள்ளோம். நம்முடைய கழகத் தலைவர் அனைத்து கட்சி கூட்டத்தையும் கூட்டி உள்ளார். கழகத்தின் சார்பில் நாம் மேற்கொள்ள வேண்டிய பணியை மிக முக்கியமாக புரிந்து கொள்ள வேண்டும்.

நம்முடைய கழகத் தலைவர் நம்மை தொடர்ந்து தேர்தல் பணிக்காக தயார் செய்து கொண்டுள்ளார். ஏற்கனவே ஓரணியில் தமிழ்நாடு என்ற அளவில் ஒவ்வொரு வீடாக சென்று நாம் இங்கு இருக்கக்கூடியவர்களை கழகத்தில் இணைத்து இருக்கிறோம். தற்போது ஒவ்வொரு வீட்டிலும் யார் உள்ளனர் என நமக்கு தெரியும். நமது மண்டல பொறுப்பாளரால் தரப்பட்டுள்ள கையேட்டில் யார் யாருக்கு வாக்கு உள்ளது என்பதை குறித்துள்ளோம். வெளிமாநிலத்தவர்கள் எந்த வீட்டில் உள்ளனர் என நமக்கு தெரியும். இன்னும் மீதமுள்ளவற்றையும் உடனடியாக நாம் செய்து விட்டோம் எனில் இந்த SIR திருத்த பணியை எதிர்கொள்ள உதவும்.

இந்தப் பணியை நாம் தீவிரமாக மேற்கொண்டால்தான் எதிர்காலத்தில் தேர்தலை சந்திக்க உதவியாக இருக்கும் 2002 ஆம் ஆண்டு உள்ள வாக்காளர் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுதான் தற்போது வாக்காளர் பட்டியல் சேர்த்து திருத்தத்தை மேற்கொண்டுள்ளனர்.

அந்தப் பணியை நாம் எப்படி மேற்கொள்ள வேண்டும் என்பதை எடுத்துக் கூற மண்டல பொறுப்பாளர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு வந்துள்ளார். அவர் கூறுவதை கேட்டு தம்முடைய பகுதிகளை அந்த பணிகளை மிகத் தீவிரமாக மேற்கொண்டு நமக்கான வாக்குகளை உறுதியாக வாக்காளர் பட்டியலில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் அதன் மூலம் நம்முடைய வெற்றியை உறுதி செய்ய முடியும் என கேட்டுக்கொள்கிறேன் என கூறினார்.

இக்கூட்டத்தில் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ. க.கண்ணன், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.பி. பாலசுப்ரமணியன், குன்னம் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் ஏ.கே.அருண், அரியலூர், செயங்கொண்டம் தேர்தல் பொறுப்பாளர் அன்பரசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அமரமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர்கள் மு.கணேசன், சி.சந்திரசேகரன், லதாபாலு, ஒன்றிய பொறுப்பாளர்கள் தனசேகர், இரா.கென்னடி, பூ.செல்வராஜ், கோ.அறிவழகன், மா.அன்பழகன், இரா.மணிமாறன், ரெங்க.முருகன்,

அசோகசக்ரவர்த்தி,ஆர்.கலியபெருமாள், வி.எழில்மாறன், தனவேல், இரா.அண்ணாதுரை, தெய்வ.இளையராஜா,பொன். செல்வம், நா.கணேசன்,அருண், இ.பி.ஆர்.செந்தில்குமார், நகர கழக செயலாளர்கள் இரா.முருகேசன், வெ.கொ.கருணாநிதி, பேரூர் செயலாளர்கள் ப.கோபாலகிருஷ்ணன், அல்போன்ஸ், அரியலூர் நகர்மன்ற தலைவர் சாந்தி கலைவாணன், மாவட்ட அணி அமைப்பாளர்கள் கே.சி. லூயிகதிரவன், எஸ்.ஆர்.இராமராஜன், குலோத்துங்கன், பானுமதி இராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் இரா.பாலு,சி. ஆர்.எம்.பொய்யாமொழி, ஆர். எம்.அன்பழகன், வி.எம்.ஷாஜகான், சுமதி கருணாநிதி, மற்றும் அரியலூர், ஜெயங்கொண்டம், குன்னம் சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த BLA2, BDA (பூத் IT Wing) நிர்வாகிகள்,கழக ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் அனைத்து அணி நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய,நகர கழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.



தேனி வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் தேனி தனியார் மண்டபத்தில்மாவட்ட அவைத் தலைவர் பி டி செல்லபாண்டி தலைமையில் நடைபெற்றது சரவணகுமார் எம்.எல்.ஏ. பெரியகுளம் தொகுதி பார்வையாளர் முத்துராமலிங்கம், போடி தொகுதி பார்வையாளர் நேரு பாண்டியன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்பி ஆலோசனை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் மாநில நிர்வாகிகள் மாவட்ட துணை செயலாளர்கள்.ஒன்றிய செயலாளர்கள் நகர செயலாளர்கள் பேரூர் செயலாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் சார்பு அணி நிர்வாகிகள்கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தத்திற்கு எதிராக

# ஒன்றிணைந்து குரல் கொடுப்பது அனைத்துக் கட்சிகளின் கடமை!

## வலைதளப்பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, நவ.3

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தையொட்டி வெளியிட்ட வலைதளப்பதிவில், “SIRக்கு எதிராக ஒன்றிணைந்து குரல் கொடுப்பது அனைத்துக் கட்சிகளின் கடமை!” என்று வலியுறுத்தியுள்ளார்.

முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பறித்து, ஜனநாயகத்தைப் படுகொலை செய்யும் நோக்கோடு அவசரகதியில் மேற்கொள்ளப்படும் SIRக்கு எதிராக ஒன்றிணைந்து குரல் கொடுப்பது அனைத்துக் கட்சிகளின் கடமை!

வாக்காளர் பட்டியல் திருத்தத்தைக் குழப்பங்கள் ஐயங்கள் இல்லாமல் போதிய கால அவகாசத்துடன், 2026 பொதுத் தேர்தலுக்குப் பின்பு நடத்த வேண்டும் என்ற நமது கோரிக்கையை ECI ஏற்காததால், உச்சநீதி மன்றத்தை நாட இன்றைய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளோம்.

அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் பங்கேற்றுத் தங்களுடைய உணர்வைப் பதிவு செய்த 49 கட்சிகளின் தலைவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இக்கூட்டத்தில் பங்கேற்காதவர்களும் தங்களுடைய கட்சிகளில் SIR குறித்து விவாதித்து, ஜனநாயகத்தைக் காத்திடும் முன்னெடுப்பை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அப்பதிவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### தாம்பரம் மாநகரம் – பீர்க்கன்காரணை 59–வது வட்டக் கழகச் செயலாளர்

# கே.வெங்கடேசன் - வெ.வைதேகி இல்லத் திருமண விழா!

## கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. – அமைச்சர் தா.மோ.அன்பரசன் – எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. – இ.கருணாநிதி எம்.எல்.ஏ. வாழ்த்து!

*சென்னை, நவ. 3 -*

*கழகத் தலைவர் முதல்வர் மு க ஸ்டாலின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் நல்வாழ்த்துக்களுடன் தாம்பரம் மாநகராட்சி பீர்க்கன்காரணை 59ஆவது வட்டக் கழக செயலாளர் கே.வெங்கடேசன் முன்னாள் மாமன்ற உறுப்பினர் வெ. வைதேகி இணையரின் மூத்த மகள் வெ.யுவபாரதி புதுப்பெருங்களத்தூர் வெங்கடேஸ்வரா தெருவில் வசிக்கும் ந. தனசேகரன் த.பரமேஸ்வரி இணையரின் புதல்வர் த.மோகன் பிரசாத் ஆகியோரின் திருமண விழா 10.11.2025 திங்கட்கிழமை காலை 5:30 மணி அளவில் பழைய பெருங்களத்தூரில் உள்ள லட்சுமி நாராயன் மஹாலில் நடைபெறுகிறது.*

*இவ்விழாவிற்கு பெருங்களத்தூர் தெற்கு பகுதி கழக செயலாளர் எஸ் சேகர் எம்சி தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஆர் எஸ் ஷங்கர் ஆகியோர் தலைமை வகிக்கின்றனர்.*



*59 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ராஜேஸ்வரி சங்கர் வரவேற்புரை ஆற்றுகிறார்.*

*ஆர்.மஞ்சுநாதன், ஜே.குப்புசாமி, வி.யோபு காந்த், எஸ்.கோபாலகிருஷ்ணன், டி.குமரேசன் ஆர். பால்பாண்டியன், பி.கார்த்திக் ராஜா, ஏ.கோவர்தனன், ஏ.கணபதி, ஜி. மோகன் ராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*மணவிழாவில் காஞ்சி வடக்கு மாவட்டக் கழக செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன், கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., இ. கருணாநிதி எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்குகின்றனர்.*

*மேலும் இவ்விழாவில் மீ.அ.வைத்தியலிங்கம், தாம்பரம் மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், டி.காமராஜ் எம்.சி., படப்பை ஆ.மனோகரன், ஆர்.சுந்தரமூர்த்தி, த.ஜெயக்குமார், மு.ஆதிமாறன்,*

*எஸ்.இந்திரன், பி.புகழேந்தி எம்.சி., இரா. சுரேஷ், அ.நடராஜன் எம்.சி., க.தேவேந்திரன், கோல்ட் டி.பிரகாஷ், பொன்.சதாசிவம், மு.வேல்முருகன், அ.விநாயகமூர்த்தி, எல்.லோகநாதன், எம். கே.டி.கார்த்திக், வி.விஜயகுமார், வ.க.ரவிச்சந்திரன், ஜி.வேலுமணி, ச.ராஜேஷ், இ.விக்கி, எஸ்.ஜி.கருணாகரன், மங்களபுரம் எம்.பாபு, இரா.தாமோதரன், வி. கார்த்திக், பா.குறிஞ்சி சிவா, எஸ்.மலைராஜன், இரா.தேவராஜ், எஸ். மோகன்ராஜ், புருஷோத்தமன், இ.சேது மாதவன், ஆர்.பரஞ்சோதி, பி.நந்தகுமார்,*

*டி.ஆர்.கோபி.எம்.சி., திருமதி கமலா சேகர் எம்.சி., திருமதி மதுமிதாமதன் எம்.சி., திருமதி ஹேமாவதி சேகர் எம்.சி., செ.சுரேஷ் எம்.சி., தருமதி சசிகலா கார்த்திக் எம்.சி., திருமதி மல்லிகா சிவபிரகாசம், எஸ்.ராமதாஸ் தமயந்தி, கே.ரவி, கே.சாமுண்டீஸ்வரி, டி.வரலட்சுமி, சுகந்தி சேகர், டி.தயாளன், இ.எம். சாம்சன், ஜி.கோதண்டன், கோமதி அப்பாசாமி, பொற்செல்வி ஆறுமுகம், ராஜசுலோக்சனா மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்ற னர்.*

*முன்னாள் எம்.சி. கே. ராஜேந்திரன் நன்றி கூறுகிறார்.*

### முதலமைச்சரின் சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ்

# ரூ7.23கோடி மதிப்பீட்டில் மரக்காணம் ஒன்றியத்தில் புதிய சாலைகள்அமைக்கும் பணிகள்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பணியை தொடங்கி வைத்தார்.

*திண்டிவனம் நவ 3.*

*முதலமைச்சரின் சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ7.23கோடி மதிப்பீட்டில் மரக்காணம் ஒன்றியத்தில் நடைபெறும் புதிய சாலைகள்அமைக்கும் பணிகளை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ பூமி பூஜை செய்து பணியை தொடங்கி வைத்தார்.*

*விழுப்புரம் மாவட்டம் ஊரக வளர்ச்சிமற்றும் ஊராட்சி துறை சார்பில் மரக்காணம் ஒன்றியத்தில்முதலமைச்சரின் கிராம சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ்நகர் ஊராட்சி முருகன் கோவில் சாலை அமைப்பதற்கு ரூ 71.88லட்ச மதிப்பீட்டிலும், இராவணாபுரம்இருளர் காலனி ரோடு அமைப்பதற்கு 66.42லட்சம் மதிப்பீட்டிலும், 28.40லட்சம்ரூபாய் மதிப்பீட்டில் ஆலங்குப்பம் ஏந்தூர்சாலை அமைப்பதற்கும், 42.23லட்ச ரூபாய் மதிப்பீட்டு ரங்கநாதபுரம் கேகே மேடு சாலை அமைப்பதற்கும் 38 . 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஊரணி பாலக்காடு சாலை அமைப்பதற்கும் 23.23 லட்சம் மதிப்பீட்டில் ஊரணி காட்டு கொல்லை சாலை அமைப்பதற்கும், 36.39 லட்சம் மதிப்பீட்டில் குரும்பறம் நடுக்குப்பம் சாலை அமைப்பதற்கும், 68.53லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வடகரம் கிராம சுடுகாடு சாலை அமைப்பதற்கும், 49.86லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூனிமேடு கழுவெளி சாலை அமைப்பதற்கும், 109.80பத்து ரூபாய் மதிப்பீட்டில் அரசப்பூர் ராயநல்லூர் சாலை அமைப்பதற்கும், 61.58லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வேப்பேரி குரூர்சாலை அமைப்பதற்கும் 61.58லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குரூர்வட நெற்குணம் சாலை உள்ளிட்ட 13ஊராட்சிகளில் புதிய சாலைகள் அமைப்பதற்குபூமி பூஜை விழா மரக்காணம் ஒன்றியம் நகர் ஊராட்சியில் நடைபெற்றது.*

*நிகழ்ச்சிக்கு மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன் தலைமை தாங்கினார் துணை சேர்மன் பழனி முன்னிலையில் வகித்தார் ஒன்றிய கவுன்சிலர் அர்ஜுனன்,ஊராட்சி மன்ற தலைவர்குமுதா ஜெயமூர்த்தி ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.*

*நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ கலந்துகொண்டு 13 ஊராட்சிகளில் 7 கோடியே 23 லட்சத்தி 89 ஆயிரம் மதிப்பீட்டில் புதிய சாலைகள் அமைப்பதற்கு பூமி பூஜை செய்து பணிகளை தொடங்கி வைத்தார்.*

*நிகழ்ச்சியில்மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார்,மரக்காணம் மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன்,ஒன்றிய கவுன்சிலர்கள்தேசம் பாலா, நாகஜோதி கணேஷ், மாவட்ட ஆதி திராவிடர் நல அணி அமைப்பாளர் திருமலை ,ஒன்றிய நிர்வாகிகள் செல்வம், பாபு, சுரேஷ்குமார், தேவதாஸ், வினோத், ஊராட்சி நிர்வாகிகள் சேதுபதி ராஜா, குமார்,பூபாலன், சீனிவாசன்,தகவல் தொழில் நுட்ப அணி சங்கர்,எழிலரசன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.*